# 93. கள்ளுண்ணாமை

**921.** *உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்*
*கட்காதல் கொண்டொழுகு வார்*

**கள்ளின் மேல் காதல் கொண்டு**
**கள் மயக்கத்திலேயே எப்போதும் இருப்பவர்களைக்**
**கண்டு பகைவர்கள் பயப்பட மாட்டார்கள் !**
**கள் குடியர் தம் மதிப்பையும் இழப்பர் !**

**922.** *உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்*
*எண்ணப் படவேண்டா தார்*

**கள்ளை குடிக்காதீர்கள்...!**
**கற்றவர்கள் – சான்றோர்கள் மதிப்பைப் பெற**
**கனவிலும் நினைக்காதவர்கள் வேண்டுமானால்**
**கள்ளைக் குடிக்கலாம்...!**

**923.** *ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி*

**கருவறையில் பத்து மாதம் சுமந்து பெற்றவள் முன்பு**
**கள்ளருந்தி களித்து மயங்கும் மகனை**
**கண்டால் ஈன்றவள் முகமே வெறுப்பாகும் போது**
**கற்ற சான்றோரின் முகத்தில் எப்படி மகிழ்ச்சி உண்டாகும் ?**

**924.** *நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்*
*பேணாப் பெருங்குற்றத் தார்க்கு*

**நாடே இகழும் 'கள்' எனும் மயக்கத்தை**
**நாடும் பெருங் குற்றத்தாரைக் கண்டு**
**நாணம் எனும் நல்லவள் முகத்தைக் காட்ட**
**நாணி புறமுதுகிட்டு போய் விடுவாள் !**

**925.** *கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து*
*மெய்யறி யாமை கொளல்*

**மெச்சும் பொருளை செலவு செய்து**
**மெய் மறக்க வைக்கும் கள்ளைக் குடித்து**
**செயல் மறந்து மதி மயங்கக் காரணம்**
**செயலறியாமை எனும் மூடத்தனமே !**

**926.** *துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்*

**கண் துஞ்சி உறங்குபவரும் – உயிர்
கவர்ந்து செத்தாரும் வேறு வேறல்லர் !
அதுபோல் எல்லாக் காலமும் – உயிரை
அழிக்கும் நஞ்சு உண்பவரும் கள் உண்பவரும் வேறு வேறல்லர் !**

**927.** *உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்*

**மறைந்திருந்து கள்ளைக் குடித்து
மயங்கி சரிந்தாலும் அவர்கள் குடித்ததை
மறைக்க முடியாமல் அவர்களது விழிகளே சுழன்று
மயங்குவதைக் கண்டு உள்ளூரில் வாழும்
மக்கள் உள்ளத்தால் எள்ளி நகையாடுவர் !**

**928.** *களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும்*

**கள்ளைக் குடிக்கவே மாட்டேன் எனக்
கள் குடிப்பவன் பொய் சொல்வதை விட்டு விட வேண்டும் !
மறைத்த உண்மையை குடித்த கள்
மனதிலிருந்து மறக்காமல் மறைக்காமல் வெளியே கொட்டி விடும் !**

**929.** *களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று*

**கள்ளுண்டு களித்தவனை – குடிக்காதே
கள்ளை என கண்டித்து அறிவுரைப்பது
நீருக்குள் மூழ்கியவனை – தீப்பந்தம் கொண்டு
நீரில் துளாவி தேடுவதைப் போல !**

**930.** *கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு*

**கள் உண்ணாத பொழுது குடிகாரன்
கள் குடித்து களிக்கின்ற இன்னொருவரைக்
களித்து மயங்கி சோர்ந்து கிடப்பதை
கண்ட பிறகாவது அவமானப்பட்டுத் தானும்
கள் குடித்த பின் இந்த அவல நிலை தானே என உள்ளத்தால்
கண்டுணர மாட்டானா ?**